# புதிய விடியல் கோச்சிங்சென்டர் தேனி

அரசுப்பணிக்கோர் அடித்தளம்

**Contact : 89 40 88 62 27**

Run By **PUTHIYA VIDIYAL TRUST**

**Email : puthiyavidiyaltheni.yahoo.co.in**

**www. puthiyavidiyaltheni.in**

*OFFICE :* **Amman store,T.A.M.C. COLONY OPP,**

**Bommyakoundanpatty, THENI.625 531.**

Exam date : 28.02.2016

www.Kanchikalvi.com

TENTATIVE KEY : 28.02.2016

PUTHIYA VIDIYAL THENI.

## TNPSC –V.A.O - பொதுத்தமிழ் - வினா விடைகள் மற்றும் விளக்கங்கள்

1.பொருளுக்கு ஏற்ற பொருத்தமான உவமையைத்தேர்ந்தெடுத்து எழுதுக : 'காத்திருந்து ஏமாந்து போவது'
அ)மழைமுகம் காணாப் பயிர் போல ஆ)இலவு காத்த கிளி போல
இ)அனலிடைப்பட்ட புழு போல ஈ)கிணற்றுத் தவளை போல

***விடை: ஆ)இலவு காத்த கிளி போல***

- மழைமுகம் காணாப் பயிர்போல - வாடியிருத்தல்
- அனலிடைப்பட்ட புழுபோல - துடித்தல்
- கிணற்றுத்தவளை போல - உலக அறிவின்மை

2. தீண்டிற்று என்ற வினைமுற்றுச்சொல்லின் வேர்ச்சொல்லைத் தேர்க
அ)தீண் ஆ)தீண்டி இ)தீ ஈ)தீண்டு

***விடை:*** ஈ)தீண்டு

3..இரண்டு அடி முதல் பன்னிரண்டு அடி வரை வரும் பா
அ)வெண்பா ஆ)ஆசிரியப்பா இ)வஞ்சிப்பா ஈ)கலிப்பா

***விடை:*** அ)வெண்பா

- **பா நான்கு வகைப்படும்**
- **அவை வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்பன**

**வெண்பாவின் பொது இலக்கணம்:-**

1. **ஈற்றடி முச்சீராய், ஏனைய அடிகள் நாற்சீராய் வரும்**
2. **இயற்சீர் வெண்சீர் வரும் பிற சீர்கள் வாரா**
3. **இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் வரும் பிற தளைகள் வாரா**
4. **ஈற்றடியின் ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாடுகளுள் ஒன்றைக் கொண்டு முடியும்**

5. செப்பலோசை பெற்று வரும்
6. இரண்டடி முதல் பன்னிரண்டு அடிவரை வரும்

4. Whats app என்ற சொல் பார்க்கவும் கேட்கவும் படிக்கவுமான மின்னஞ்சல் குறுஞ்செய்தி வசதியை முனைவர் ம.இராசேந்திரன் ………………………… என மொழி பெயர்த்துள்ளார்

அ)தூதுலாவி ஆ)கட்செவி அஞ்சல் இ)எண்ண நகலி ஈ)தூது செயலி

***விடை:*** ஆ)கட்செவி அஞ்சல்

5.ஒற்றளபெடையில் அளபெடுக்கும் மெய்யெழுத்துகளின் எண்ணிக்கை

அ)8 ஆ)10 இ)11 ஈ)12

***விடை:*** ஆ)10

***ஒற்றளபெடை: (1 மாத்திரை)***

- **செய்யுளில் ஓசை குறைந்தால் மெய் எழுத்துகளும், ஆய்த எழுத்தும் அளபெடுப்பதல் எ.கா. எங்ங்கிறைவன், வெ∴.குவார்க்கு.**
- **மெய் எழுத்துகளில் ங,ஞ,ண,ந,ம,ன,வ,ய,ல,ள ஆகிய பத்து மெய்யும் அளபெடுக்கும்.**
- **ஆய்த எழுத்தும் அளபெடுக்கும் (10+1=11)**

6.சரியான விடையைத்தேர்வு செய்க

அ)இயல் இசை நாடகம் முதலான முத்தமிழை வளர்த்தல் வேண்டும்

ஆ)இயல் இசை நாடகம் ஆகிய முத்தமிழை வளர்த்தல் வேண்டும்

இ)இயல் இசை நாடகம் முதலிய முத்தமிழை வளர்த்தல் வேண்டும்

ஈ)இயல் இசை நாடகம் போன்ற முத்தமிழை வளர்த்தல்வேண்டும்

***விடை:***

7.கோடிட்ட இடத்தில் உரிய விடையைத்தேர்ந்து எழுதுக

கூம்பு என்பது ……………….. பெயர் ஆகும்.

அ)அளவுப்பண்பு ஆ)சுவைப்பண்பு இ)வடிவப்பண்பு ஈ)நிறப்பண்பு

***விடை:***இ)வடிவப்பண்பு

- **பண்பை உணர்த்தும் பெயர் பண்புப்பெயர். நிறம், சுவை, அளவு, வடிவம் ஆகியவற்றின் அடிப்படையில் வரும். எ.கா.**

**செம்மை, கருமை – நிறப்பண்பு**
**வட்டம், சதுரம் - வடிவப்பண்பு**
**ஒன்று, அரை – அளவுப்பண்பு**
**காரம், புளிப்பு – சுவைப்பண்பு**

8. ஆற்றுவார் - அசை பிரித்துக் காட்டுதலில் சரியான விடையைத்தேர்ந்தெடு

அ)ஆற் + று + வார் ஆ) ஆற் + றுவார் இ)ஆற்று+ வார் ஈ) ஆ + ற்று + வார்

***விடை:*** ஆ) ஆற் + றுவார்

***அசை :*** **எழுத்து தனித்தோ, பல சேர்ந்தோ ஓசைபட அசைந்து(பிரிந்து) நிற்பது அசை.**

***அசை – 2 வகைகள் :*** **அ) நேரசை ஆ) நிரையசை**

***நேரசை***

**குறில் தனித்தும், குறில் ஒற்றடுத்தும், நெடில் தனித்தும், நெடில் ஒற்றடுத்தும் வருவது.**

***நிரையசை:***

**குறில் இணைந்தும், குறில் இணைந்து ஒற்றும், குறில் நெடில் இணைந்து, குறில் நெடில் இணைந்து ஒற்றும் வருவது.**

9.கீழக்காணும் சொற்களுள் குற்றியலுகரம் அல்லாத சொல்லைத்தேர்ந்தெடு

அ)சுக்கு ஆ) சார்பு இ) உண்ணு ஈ)அரசு

***விடை:***இ) உண்ணு

**குற்றியலுகரம் → குறுமை + இயல் + உகரம்**

- **குறுமை → குறுகிய, இயல் -- ஓசை, உகரம் -- 'உ' எழுத்து**
- **குறுகிய ஓசையுடைய உகரம் குற்றியலுகரம் (1/2 மாத்திரை)**
- **உகரம் தன் 1 மாத்திரை அளவிலிருந்து ½ மாத்திரை அளவு குறைந்து ஒலிக்கும்**
- **கு,சு,டு,து,பு,று என்னும் ஆறு வல்லின எழுத்துகள் தனிநெடிலைச் சார்ந்து வரும் போதும், பல எழுத்துகளைச் சார்ந்து சொல்லின் இறுதியில் வரும் போதும் ஒரு மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிக்கும் இதுவே குற்றியலுகரம் ஆகும்**

www.Kanchikalvi.com
PUTHIYAVIDIYAL, THENI.

- சொல்லின் ஈற்று அயலெழுத்தை அடிப்படையாகக் கொண்டு அதனை ஆறு வகையாகப் பிரிப்பர் அது
    - நெடில் தொடர்க் குற்றியலுகரம். (எ.கா) ஆறு, காசு, ஆடு
    - உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் (எ.கா) அழகு, அரசு, பாலாறு
    - ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம் (எ.கா) எ∴து, அ∴து, க∴சு
    - வன்தொடர்க் குற்றியலுகரம் (எ.கா) சுக்கு, பட்டு, கச்சு
    - மென்தொடர்க் குற்றியலுகரம் (எ.கா) மஞ்சு, சங்கு, சந்து
    - இடைத்தொடர்க் குற்றியலுகரம் (எ.கா) மார்பு, கொய்து, மூழ்கு
- நெடில் தொடர்க் குற்றியலுகரம் மட்டும் இரண்டு எழுத்துக்களைப்பெற்று வரும். ஏனைய ஐவகை குற்றியலுகரச்சொற்கள் இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துகளைப் பெற்று வரும்

10.பொருள்கோளின் வகைகள் எண்ணிக்கை

அ)4 ஆ)6 இ)8 ஈ)10

***விடை:*** இ)8

**பொருள்கோள் (பொருள் கொள்ளும் முறை)**

செய்யுளில் உள்ள சீர்களையோ, அடிகளையோ பொருள் உணர்வுக்கு ஏற்ற வகையில் அமைத்துக் கொள்ளும் முறையைப் பொருள்கோள் என்கிறோம்.

***பொருள்கோள் - 8 வகைகள்:***

1) ஆற்றுநீர்ப் பொருள்கோள்
2) மொழி மாற்றுப் பொருள்கோள்
3) நிரல் நிறைப் பொருள்கோள்
4) விற்பூட்டு(அ)பூட்டுவிற் பொருள்கோள்
5) தாப்பிசைப் பொருள்கோள்
6) அளைமறி பாப்புப் பொருள்கோள்
7) கொண்டு கூட்டுப் பொருள்கோள்
8) அடிமறி மாற்றுப் பொருள்கோள்

11.அன்னபூரணி எனும் புதின ஆசிரியர்

அ)ஜெயகாந்தன் ஆ)அகிலன் இ)வைரமுத்து ஈ)க.சச்சிதானந்தன்

***விடை:*** ஈ)க.சச்சிதானந்தன்

www.Kanchikalvi.com

***தமிழ்ப்பசி (க.சச்சிதானந்தன்)***

- நூல்கள் கனித்தமிழில் அள்ளிட வேண்டும் - அதை
- நோக்கித் தமிழ்ப்பசியும் ஆறிட வேண்டும்.
- பெயர்:- க. சச்சிதானந்தன்.
- ஊர்:- பருத்தித்துறை, யாழ்ப்பாண மாவட்டம் - இலங்கை.
- புலமை :- தமிழ், ஆங்கிலம், சமற்கிருதம் - மும்மொழிப்புலமை.
- படைப்புகள்:- ஆனந்தத்தேன் - கவிதை (1954)அன்னபூரணி (புதினம்), யாழ்ப்பாணக் காவியம்.
- சிறப்பு:- நவநீதகிருட்டின பாரதியாரின் மாணவர் .
- இவர் பாடலில் கம்பனின் மிடுக்கையும் பாரதியின் சினப்போக்கையும் காணலாம்.

12.பொருத்துக

அ)தமிழியக்கம் - 1. பாரதியார்
ஆ)சீட்டுக்கவி - 2. தோலா மொழித்தேவர்
இ)சேக்கிழார் பிள்ளைத்தமிழ் - 3. பாரதிதாசன்
ஈ)சூளாமணி - 4. மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ | 1 | 2 | 3 | 4 |
| ஆ | 2 | 4 | 1 | 3 |
| இ | 3 | 1 | 4 | 2 |
| ஈ | 4 | 3 | 2 | 1 |

***விடை:*** இ 3 1 4 2

13.பொருத்துக

நூல் புலவர்

அ)பெரியபுராணம் 1.திருத்தக்கத்தேவர்
ஆ)இராமாயணம் 2.உமறுப்புலவர்
இ)சீறாப்புராணம் 3.சேக்கிழார்
ஈ)சீவக சிந்தாமணி 4.கம்பர்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ | 3 | 4 | 2 | 1 |
| ஆ | 2 | 4 | 3 | 1 |
| இ | 4 | 2 | 1 | 3 |
| ஈ | 3 | 2 | 4 | 1 |

***விடை:*** அ 3 4 2 1

14.பொருத்துக
அ)வீரகாவியம் - 1.நா.காமராசன்
ஆ)இயேசு காவியம் - 2.சிற்பி . பாலசுப்ரமணியம்
இ)ஒளிப்பறவை - 3.கண்ணதாசன்
ஈ)சகாராவைத் தாண்டாத ஒட்டகங்கள் - 4. முடியரசன்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ | 4 | 3 | 2 | 1 |
| ஆ | 3 | 2 | 1 | 4 |
| இ | 2 | 1 | 4 | 3 |
| ஈ | 1 | 2 | 3 | 4 |

***விடை:*** அ 4 3 2 1

15. எச்.ஏ. கிருட்டிணனாருக்கு இலக்கணம் கற்பித்த ஆசிரியரின் பெயர்
அ)மாணிக்கவாசகத்தேவர் ஆ)சங்கர நாராயணர் இ)பிலவண சோதிடர் ஈ)தெய்வநாயகி
***விடை:*** அ)மாணிக்கவாசகத்தேவர்

- **'கிறித்தவக் கம்பர்' எனப் போற்றப்படுபவர்.**
- **பிறப்பு: 23.04.1827 கரையிருப்பு (திருநெல்வேலி மாவட்டம்)**
- **பெற்றோர்: சங்கர நாராயணர் - தெய்வநாயகி அம்மாள்**
- **முப்பதாவது வயதில் தன்பெயரை மாற்றிக்கொண்டவர்(ஹென்றி ஆல்பிரட் கிருட்டினனார்). தந்தையிடம் தமிழ் இலக்கியங்களையும், மாணிக்க வாசகத் தேவரிடம் இலக்கணங்களையும், பிலவணச் சோதிடரிடம் வடமொழியையும் கற்றார்.**
- **இயற்றிய நூல்கள்: இரட்சண்ய சமய நிர்ணயம், இரட்சண்யக்குறள், இரட்சண்ய மனோகரம் போன்றன.**
- **இறப்பு: 03.02.1900**

16. சூடாமணி நிகண்டு – ஆசிரியர்
அ)திவாகார முனிவர் ஆ)பிங்கலம் இ)வீரமண்டல புருடர் ஈ)காங்கேயர்
***விடை:*** இ)வீரமண்டல புருடர்
**நிகண்டுகள்:-**

- **தமிழ் அகரமுதலி வரலாற்றில் செம்பாதி இடத்தைப்பெறும் சொற்பொருள் துறை நூல்கள் நிகண்டுகளாம்**
- **நிகண்டுகளில் பழைமையானது சேந்தன் திவாகரம்**
- **இதன் ஆசிரியர் திவாகரர்**
- **25 நிகண்டுகள் தோன்றியுள்ளன**
- **இவற்றில் சிறப்பானது மண்டல புருடர் இயற்றிய சூடாமணி நிகண்டு.**

17."மொழிகளின் காட்சிச்சாலை இந்தியா" - இக்கூற்று யாருடையது
அ)பேராசிரியர் ச.அகத்தியலிங்கம் ஆ) பேராசிரியர் பெ.சுந்தரம் பிள்ளை
இ) பேராசிரியர் சாலை.இளந்திரையன் ஈ) பேராசிரியர் சாலமன் பாப்பையா
***விடை:*** அ)பேராசிரியர் ச.அகத்தியலிங்கம்

- ❖ **கிரேக்கம் இலத்தீன், சமற்கிருதம், சீனம், எபிரேயம் அரபு ஈப்ரு ஆகியவற்றை செம்மொழிகள் எனப் பட்டியலிடுகிறார் மொழியியில் அறிஞர் ச.அகத்தியலிங்கம்**
- ❖ **இந்தியாவை மொழிகளின் காட்சிச்சாலை எனக் கூறியவர் ச.அகத்தியலிங்கம்.**

PUTHIYA VIDIYAL, THENI.
www.Kanchikalvi.com

- **இந்தியாவின் மொத்தம் 12 மொழிக்குடும்பங்கள் உள்ளன.**
- **அவற்றில் 325 மொழிகள் பேசப்படுகிறது என இந்திய மானிடவியல் கணக்கெடுப்பு கூறுகிறது.**

18. பொருத்துக

| | |
|---|---|
| அ)மூதுரை | 1. சிவப்பிரகாசர் |
| ஆ)வெற்றிவேற்கை | 2. முனைப்பாடியார் |
| இ)நன்னெறி | 3. அதிவீரராம பாண்டியர் |
| ஈ)அறநெறிச்சாரம் | 4. ஔவையார் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ | 4 | 3 | 1 | 2 |
| ஆ | 2 | 3 | 1 | 4 |
| இ | 3 | 4 | 1 | 2 |
| ஈ | 4 | 1 | 2 | 3 |

***விடை:*** அ 4 3 1 2

- 17ம் நூற்றாண்டில் சிவப்பிரகாசர் 'நன்னெறி' என்ற நீதிநூலை எழுதினார்.
- 18ம் நூற்றாண்டில் சிவஞான முனிவர் 'சோமேசர் முதுமொழி வெண்பா' எழுதித் திருக்குறளுக்கு ஏற்ற கதைகளை இணைத்தார்.
- குமரகுருபரரின் நீதிநெறி விளக்கம் 101 வெண்பாக்களையும் சிவபிரகாச சுவாமிகளின் நன்னெறி 40 வெண்பாக்களையும் பெற்றுள்ளன. கி.பி 18
- உலகநாதர் 13 விருத்தங்களில் உலகியல் சார்ந்த நீதிகளை உரைக்கின்றார்.

19. மத்த விலாசம் - என்னும் நாடக நூலை எழுதியவர்

அ)இராஜஇராஜசோழன் ஆ) இராஜேந்திரசோழன் இ)நந்திவர்மன் ஈ)மகேந்திரவர்மன்

***விடை:*** ஈ)மகேந்திரவர்மன்

- **முறுவல், சயந்தம், செயிற்றியம், மதிவாணர் நாடகத் தமிழ் நூல், விளக்கத்தார் கூத்து, குணநூல், கூத்து நூல் முதலிய பல நாடக நூல்கள் நாடகத்திற்கும், நாட்டியத்திற்கும் இலக்கணம் வகுத்துள்ளன.**
  - **பரிதிமாற் கலைஞர் எழுதிய நாடகநூல் - நாடகவியல்**
    **சுவாமி விபுலானந்தர் - மதங்க சூளாமணி**
    **மறைமலையடிகள் - சாகுந்தலம்**
    **பம்மல் சம்பந்தனார் - நாடகத்தமிழ்**
- **7 ஆம் நூற்றாண்டில் மகேந்திரவர்ம பல்லவன் மத்த விலாசம் என்ற நாடக நூலை எழுதியுள்ளார்.**
- **11 ஆம் நூற்றாண்டு - இராசராசன் ஆட்சிக்காலம் இராசராசேச்சுவர நாடகம் நடைபெற்றது என கல்வெட்டு கூறுகிறது**

www.Kanchikalvi.com

20. பாரதிதாசன் நூல்களில் பொருந்தாத நூல்

அ)குடும்ப விளக்கு ஆ) பாண்டியன் பரிசு இ)இருண்ட வீடு ஈ) கள்ளோ காவியமோ

***விடை:*** ஈ) கள்ளோ காவியமோ

*ஆசிரியர் குறிப்பு*

- *புரட்சிக்கவிஞர் எனவும் பாவேந்தர் எனவும் புகழப்படுபவர்*
- *இயற்பெயர் சுப்புரத்தினம்*
- *இவர் பாரதியின் கவிதை மீது கொண்ட காதலால் தம்முடைய பெயரைப் பாரதிதாசன் என மாற்றிக்கொண்டார்*
- *பெற்றோர் - கனகசபை - இலக்குமியம்மாள்*
- *கல்வி :தமிழ் பிரெஞ்சி ஆங்கிலம் ஆகியவற்றில் புலமை மிக்கவர்*
- *காலம் 29.04.1981 -21.04.1964*

*இயற்றியவை:*

- *குடும்பவிளக்கு*
- *பாண்டியன் பரிசு*
- *சேரதாண்டவம்*
- *இருண்டவீடு*
- *தமிழச்சியின் கத்தி*
- *பிசிராந்தையார்*
- *குறிஞ்சித்திட்டு*
- *அழகின்சிரிப்பு*
- *தமிழியக்கம் முதலியன*

PUTHIYA VIDIYAL, THENI.

21. ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
எனும் பாடலடிகள் இடம் பெற்ற நூல்

அ)குறுந்தொகை ஆ)புறநானூறு இ)பதிற்றுப்பத்து ஈ)பத்துப்பாட்டு

***விடை:*** ஆ)புறநானூறு

22.மேற்கணக்கு நூல்கள் என்று அழைக்கப்படுபவை

அ)எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் ஆ) நீதி இலக்கியம்
இ)பக்தி இலக்கியம் ஈ)இக்கால இலக்கியம்

***விடை:*** அ)எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும்

- **மேற்கணக்கு நூல்கள் → 18 (பத்துப்பாட்டு, எட்டுத்தொகை) இவை சங்க இலக்கியங்கள்**
- **சங்க நூல்களுக்குப் பின் தோன்றிய நூல்களின் தொகுப்பு - பதினெண்கீழ்க்கணக்கு**
- **இதில் பெரும்பாலானவை அறநூல்கள்.**

23. ஐராவதீசுவரர் கோயிலைக்கட்டிய அரசன்

அ)இரண்டாம் இராசராசன் ஆ)இராசேந்திரன் இ)குலோத்துங்கன் ஈ)கிள்ளி வளவன்

***விடை:*** அ)இரண்டாம் இராசராசன்

- **காவிரி பாயும் சோழவளநாடு**
- **கலைகளின் விளைநிலம் வியக்க வைக்கும் கட்டடக்கலையும் சிற்பக்கலையும் கொழிக்கும் ஊர் கும்பகோணம்**
- **இவ்வூரின் தென்புறம் அரிசிலாறு (அரசலாறு) பாய்கிறது**
- **இதன் தென்கரையில் தாராசுரம் என்னும் ஊரில் ஐராவதீசுவரர் கோவில் உள்ளது**
- **இ∴து 800 ஆண்டுகளுக்கு முன்பு இரண்டாம் இராசராச சோழனால் கட்டப்பட்டது**

24. சரியான விடையைத்தேர்ந்தெடு
பறவைகள் இடம் விட்டு இடம் பெயர்வதை ………….என்பர்

அ)இடம் பெயர்தல் ஆ)புலம் பெயர்தல் இ)வலசைபோதல் ஈ)ஊர்விட்டு ஊர் செல்லல்

***விடை:*** இ)வலசைபோதல்

- **தீபாவளித் திருநாளன்று கூட பட்டாசு வெடிக்காத ஊர் - கூந்தன்குளம் - திருநெல்வேலி மாவட்டம் ( ஏரி உள்ளது )**
- **பறவைகள் ஒரு இடத்தை விட்டு மற்ற இடத்திற்குப் பறந்து செல்வது - வலசை போதல்**
- **பருவகால மாற்றத்தை நமக்கு உணர்த்துவன – பறவைகள்**
- **வயல் வெளிகளைத் தாக்கும் பூச்சிகள், வண்டுகளை தின்று விடுவது – பறவைகள்**
- **உழவர்களுக்கு நண்பன் - பறவைகள், மண்புழு**
- **நம்நாட்டில் ஏறத்தாழ 2400 வகைப் பறவைகள் வாழ்கின்றன**
- **பறவைகளை ஐந்து வகையாகப் பிரிக்கலாம்**

25. சிறுபஞ்ச மூலத்தில் கடவுள் வாழ்த்துடன் எத்தனை வெண்பாக்கள் உள்ளன?

அ)தொண்ணூறு ஆ)தொண்ணூற்றேழு இ)நூறு ஈ)ஐம்பது

***விடை:*** ஆ)தொண்ணூற்றேழு

- ஆசிரியர் - காரியாசான்
- மதுரைத்தமிழாசிரியர் மாக்காயனாரின் மாணாக்கர் எனச்சிறப்புப்பாயிரம் கூறுகிறது
- சமயம் : சமணம்
- இவரும் கணிமேதாவியாரும் ஒரு சாலை மாணாக்கராவர்
- பெரும்பான்மை பொது அறக்கருத்துகளும் சிறுபான்மை சமண அறக்கருத்துகளும் உள்ளன
- கடவுள் வாழ்த்துடன் 97 வெண்பாக்கள் உள்ளன
- கண்டங்கத்தரி சிறுவழுதுணை சிறுமல்லி பெருமல்லி நெருஞ்சி ஆகிய ஐந்து மூலிகையின் வேர்களும் உடல்நோயைத்தீர்ப்பன
- ஒவ்வொரு பாடலிலும் கூறப்பட்டுள்ள ஐந்து கருத்தும் மக்கள் மனநோயைப்போக்குவன

26. நவ்வி எனும் சொல்லின் பொருள்

அ) மான் ஆ) நாய் இ)நரி ஈ) செந்நாய்

***விடை:*** அ) மான்

27. தமிழில் காணும் முதல் சித்தர்

அ)திருமூலர் ஆ)அருணகிரிநாதர் இ)தாயுமானவர் ஈ)வள்ளலார்



PUTHIYAVIDIYAL, THENI.
www.Kanchikalvi.com

***விடை:*** அ)திருமூலர்

28.பொருத்துக

அ)வண்டு - 1.குனுகும்
ஆ)புறா - 2.அலப்பும்
இ)பூனை - 3. முரலும்
ஈ)குரங்கு - 4.சீறும்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ | 3 | 1 | 4 | 2 |
| ஆ | 1 | 2 | 4 | 3 |
| இ | 2 | 4 | 3 | 1 |
| ஈ | 4 | 3 | 2 | 1 |

***விடை:*** அ 3 1 4 2

**ஒலி மரபுச் சொற்கள்:**

**ஆடு கத்தும், எருது எக்காளமிடும், வண்டு முரலும், குயில் கூவும், சேவல் கூவும், மயில் அகவும், காகம் கரையும், கிளி கொஞ்சும், கூகை குழறும், வானம்பாடி பாடும், ஆந்தை அலறும், கோழி கொக்கரிக்கும், குதிரை கனைக்கும், சிங்கம் முழங்கும் (கர்சிக்கும்) நரி ஊளையிடும், நாய் குரைக்கும், பன்றி உறுமும், யானை பிளிறும், புலி உறுமும், கழுதை கத்தும்.**

29. தென்னாப்பிரிக்க நாட்டில் இந்தியரின் நலனுக்காகப் போராடிய வீரத்தமிழ் மங்கை

அ)ஈ.வெ.ரா . மணியம்மை ஆ)கஸ்தூரிபாய்
இ)வேலு நாச்சியார் ஈ)தில்லையாடி வள்ளியம்மை

***விடை:*** ஈ)தில்லையாடி வள்ளியம்மை

- **ஆங்கிலேயரின் அடக்குமுறைக் கொடுமைக்கு எதிராக உரிமைக்குரல் எழுப்பிப் போராடிய பெண்மணி தில்லையாடி வள்ளியம்மை ஆவார்.**
- **புதுச்சேரியில் வாழ்ந்த முனுசாமி என்ற நெசவாளியைத் திருமணம் செய்தார்**
- **தில்லையாடி என்னும் ஊரில் பிறந்த மங்களம் இவர்களுடைய மகள் வள்ளியம்மை 1898 ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்காவில் பிறந்தார்.**
- **தென்னாப்பிரிக்க நாட்டின் திருமணப்பதிவுச் சட்டப்படியும், கிறித்துவ மதச் சட்டப்படியும் நடைபெறாத திருமணங்கள் செல்லாது என அந்நாட்டின் உச்சநீதிமன்றம் 1913 ஆம் ஆண்டு ஒரு தீர்ப்பை வெளியிட்டது.**
- **இதற்கு எதிரான அறப்போராட்டத்திற்கு காந்தியடிகள் தலைமை ஏற்று வழி நடத்தினார்.**
- **காந்தியின் வீரம் செறிந்த உரையைக் கேட்டு தானும் அறப்போராட்டத்தில் கலந்து கொண்டதால் 1913 ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 23 ஆம் நாள் வால்க்ஸ்ரஸ்ட் என்னும் இடத்தில் நடைபெற்ற அறப்போரில் வள்ளியம்மை கைது செய்யப்பட்டார்.**
- **3 மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.**
- **சிறைச் சூழலால் உடல்நலம் குன்றிய வள்ளியம்மை 1914 பிப்ரவரி 22 ஆம் நாள் தமது 16 வது அகவையில் மரணம் அடைந்தார்**

30.மணிமேகலையில் உள்ள காதைகளின் எண்ணிக்கை

அ)10 ஆ) 20 இ)30 ஈ)40

***விடை:*** இ)30

1. விழாவறை காதை
2. ஊரலருரைத்த காதை
3. மலர்வனம் புக்ககாதை
4. பளிக்றை புக்ககாதை
5. மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதை
6. சக்கரவசளக்கோட்டம் உரைத்த காதை
7. துயிலெழுப்பிய காதை
8. மணி பல்லவத்துத் துயருற்ற காதை
9. பீடிகை கண்டு பிறப்புணர்ந்த காதை
10. மந்திரங் கொடுத்த காதை
11. பாத்திரம் பெற்ற காதை
12. அறவணர்த் தொழுத காதை
13. ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை
14. பாத்திர மரபு கூறிய காதை
15. பாத்திரங் கொண்டு பிச்சை புக்க காதை
16. ஆதிரை பிச்சையிட்ட காதை
17. உலக அறவிபுக்க காதை
18. உதயகுமரன் அம்பலம் புக்க காதை
19. சிறைக் கோட்டம் அறக்கோட்டமாகிய காதை
20. உதயகுமாரனைக் காஞ்சனன் வாளாலெறித்த காதை
21. கத்திற்பாவை வருவதுரைத்த காதை
22. சிறைசெய் காதை



PUTHIYA VIDIYAL, THENI.
www.Kanchikalvi.com

23. சிறைவிடு காதை
24. ஆபுத்திரனாடு அடைந்த காதை
25. ஆபுத்திரன் மணிபல்லவம் அடைந்த காதை
26. வஞ்சி மாநகர் புக்க காதை
27. சமயக் கணக்கர் தம் திறங்கேட்ட காதை
28. கச்சிமாநகர் புக்க காதை
29. தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதை
30. பவத்திறுமறுகெனப் பாவை நோற்ற காதை.

31.பொருந்தாத ஒன்றைக் கண்டிபிடி

அ)யசோதர காவியம் ஆ)நாககுமார காவியம் இ)உதயகுமார காவியம் ஈ)வளையாபதி

***விடை :*** ஈ)வளையாபதி

32.செல்வத்துப் பயனே ஈதல் - எனும் தொடர் இடம் பெற்றுள்ள நூல்

அ)திருக்குறள் ஆ)பரிபாடல் இ)பதிற்றுப்பத்து ஈ)புறநானூறு

***விடை :*** ஈ)புறநானூறு

33.தேவார மூவர் எனப்படுவோர்

அ)திருஞான சம்பந்தர் திருநாவுக்கரசர் மணவாசகர் ஆ)அப்பர் சுந்தரர் மணிவாசகர்
இ)நம்பி ஆரூரன் மணிவாசகர் திருநாவுக்கரசர் ஈ)சம்பந்தர் அப்பர் சுந்தரர்

***விடை :*** ஈ)சம்பந்தர் அப்பர் சுந்தரர்

- **தே + வாரம் → தெய்வத் தன்மையுடைய இசைப்பாடல்கள் என்றும்**
- **தே + ஆரம் → தெய்வத்திற்குச் சூட்டப்பெற்ற பாமாலை என்றும் பொருள் கூறுவர்.**
- **சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் முதல் ஏழும் மூவர் தேவாரம்.**
- **இதில் திருஞான சம்பந்தர் 1, 2, 3 திருமுறைகளையும், திருநாவுக்கரசர் 4, 5. 6 திருமுறைகளையும். சுந்தர் 7வது திருமுறைகளையும் படைத்துள்ளனர்.**

34. ஊக்கம் உடையான் ஒடுக்கம் எதைப்போன்றது

அ)பதுங்கும் புலி ஆ)வளைந்து நிற்கும் வில் இ)பின்வாங்கி நிற்கும் ஆடு ஈ)சீறும் பாம்பு

***விடை :*** இ)பின்வாங்கி நிற்கும் ஆடு

www.Kanchikalvi.com

35. தமிழ்மாதின் இனிய உயிர்நிலை எனப்போற்றப்படும் நூல்

அ)கம்பராமாயணம் ஆ)சிலப்பதிகாரம் இ)திருக்குறள் ஈ)நாலடியார்

***விடை :*** இ)திருக்குறள்

- தமிழின் பெருமையை உலகிற்கு எடுத்துக் காட்டிய முதல் நூல்.
- திருவள்ளுவர் காலம் கி.மு. 31 என்று தமிழக அரசு கொண்டுள்ளது.
- தமிழ் மாதின் இனிய உயிர் நிலை என்று உலகோரால் பாராட்டப் பெறும் நூல்.
- தனித்தமிழ் முதல் நூல்.
- திருக்குறளில் இரு அதிகாரங்களுக்கு அமைந்த ஒரே தலைப்பு : குறிப்பறிதல்
- அதிக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நூல்
- வள்ளுவர் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு - பாரதியார்.
- "வள்ளுவனைப்பெற்றதாற் பெற்றதே புகழ்வையகமே" எனப்பாடியவர் - பாரதிதாசன்
- சமயக்கணக்கர் மதிவழி கூறாது உலகியல் கூறிப் பொருளிது வென்ற பொருள் - கல்லாடர்
- "அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக்
  குறுகத் தறித்த குறள்". - ஔவையார்.
- "கடுகைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டி" - இடைக்காடார்
  "எல்லாப் பொருளும் இதன்பால் உள" - மதுரைத் தமிழ் நாகனார்.
- "வள்ளுவர் செய் திருக்குறளை மறுஅற நன்குணர்ந்தோர்கள்
  உள்ளுவரோ மனுவாதி ஒரு குலத்துக்கு ஒரு நீதி" -மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை.
- "எம்மதமும் எவ்வினமும் எந்நாளும்
  சம்மதம் என்று ஏற்கும் தமிழ் வேதம்" - சுத்தானந்த பாரதியார்.
- "எப்பாவலரும் இயைபவே வள்ளுவனார் முப்பால் மொழிந்த மொழி" - கல்லாடனார்
- "ஓதற்கு எளிதாய், உணர்வதற்கு அரியதாகி, வேதப் பொருளாய் மிகவிளக்கி" - மாங்குடி மருதனார்
- "வேதப் பொருளை விரகால் விரித்தும்" - செங்கண்ணனார்
- "ஆரியம் வேதம் உடைத்து" - வண்ணகஞ் சாத்தனார்
- "இந்நூலை முற்றிலும் ஓதியபின் வேறுநூல் பயிற்சி வேண்டா
  மன்னு தமிழ்ப் புலவராய் வீற்றிருக்கலாம்" - நத்தத்தனார்.
- செருமன் நாட்டின் ஆல்பர்ட் சுவைட்சர் திருக்குறளின் பெருமையினைத் தம் "இந்தியச் சிந்தனை வளர்ச்சி" என்று நூலில் ஆராய்ந்து விளக்கியுள்ளார்.

36.ஞாலத்தின் மாணப்பெரிது

அ)எதிர்பாராமல் செய்யப்படும் உதவி ஆ)பயனை எதிர்பார்த்துச் செய்யும் உதவி

இ)தகுந்த நேரத்தில் செய்யப்படும் உதவி ஈ)பயனை எதிர்பாராமல் செய்த உதவி

***விடை :*** இ)தகுந்த நேரத்தில் செய்யப்படும் உதவி

37. பரணிக்கோர் சயங்கொண்டான்

என்று கலிங்கத்துப் பரணியை இயற்றிய புலவரைப் புகழ்ந்தவர்

அ)பலபட்டடைச்சொக்கநாதர் ஆ)குமரகுருபரர் இ)தாயுமானவர் ஈ)இராமலிங்கர்

***விடை :*** அ)பலபட்டடைச்சொக்கநாதர்

- "வெண்பாவிற் புகழேந்தி பரணிக்கோர்
  செயங்கொண்டான் விருத்தம் என்னும்
  ஒண்பாவிற்கு உயர்கம்பன் கோவைஉலா
  அந்தாதிக்கு ஒட்டக்கூத்தன்
  கண்பாய கலம்பகத்திற்கு இரட்டையர்கள்
  வசைபாடக் காளமேகம்
  பண்பாயஉயர் சந்தம் படிக்காச
  லாதொருவர் பகரொனாதே" – **பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்**

| | |
|---|---|
| வெண்பா | புகழேந்தி |
| பரணி | செயங்கொண்டார் |
| விருத்தம் | கம்பர் |
| கோவை,உலா,அந்தாதி | ஒட்டக்கூத்தர் |
| கலம்பகம் | இரட்டையர்கள் |
| வசை | காளமேகம் |
| சந்தம் | படிக்காசுப்புலவர் |

www.Kanchikalvi.com
PUTHIYA VIDIYAL, THENI.

38. உலா எனும் சிற்றிலக்கியம் பாடப்பெறும் பாவகை

அ)கலிவெண்பா ஆ)ஆசிரியப்பா இ)விருத்தப்பா ஈ)வஞ்சிப்பா

***விடை :*** அ)கலிவெண்பா

| | |
|---|---|
| அந்தாதி | வெண்பா (அ) விருத்தம் |
| கோவை | கட்டளைக்கலித்துறை |
| உலா,தூது,மடல் | கலிவெண்பா |
| பரணி | தாழிசை |
| கலம்பகம் | பாவும் பாவினமும் |
| பிள்ளைத்தமிழ் | கழிநெடிலடி ஆசிரியச் சந்த விருத்தங்கள் |
| பள்ளு,குறவஞ்சி | இசைப்பாக்கள் |

39. பிறமொழிச் சொற்களை நீக்கித் தூய தமிழில் உள்ளதை எழுதுக

அ) நீ தான் என் அத்யந்த ஸ்நேகிதன் என்று கூறிச் சந்தோஷித்தான்

ஆ) நீ தான் என் நெருங்கிய நண்பன் என்று கூறி மகிழ்ச்சி அடைந்தான்

இ)நீ தான் என் அத்யந்த நண்பன் என்று கூறிச் சந்தோஷம் அடைந்தான்

ஈ) நீ தான் என் அத்யந்த நண்பன் என்று கூறி சந்தோஷப்பட்டான்

***விடை :*** ஆ) நீ தான் என் நெருங்கிய நண்பன் என்று கூறி மகிழ்ச்சி அடைந்தான்

40. பருப்பு உள்ளதா? - இது எவ்வகை வினா?

அ)கொளல் வினா ஆ)கொடை வினா இ)ஐய வினா ஈ)ஏவல்வினா

***விடை :*** அ)கொளல் வினா

- **வினா:- என்ன? எப்படி? எங்கு? ஏன்? என வினாமேல் வினாவைக் கேட்டு விடையறிய விரும்புகின்றவரே சிறந்த அறிவாளியாக ஆகமுடியும் என சாக்ரட்டிசும் தந்தை பெரியாரும் கூறுவர்.**
- **வினா ஆறு வகைப்படும்**
- **அவை அறிவினா, அறியா வினா, ஐய வினா, கொளல் வினா, கொடை வினா, ஏவல் வினா எனப்படும்**
- **அறிவினா:- தான் அறிந்த ஒரு பொருள் பற்றி பிறருக்குத் தெரியுமா என அறியும் பொருட்டு வினாவப்படும் வினா அறி வினா எனப்படும்**
  **எ.கா:- ஆசிரியர் மாணவனிடம் கேட்கும் வினா**
- **அறியா வினா:- தான் அறியாத ஒரு பொருளை அறிந்து கொள்வதற்காகப் பிறரிடம் வினாவப்படும் வினா அறியா வினா எனப்படும்**
  **எ.கா:- மாணவன் ஆசிரியரிடம் வினாவப்படும் வினா**
- **ஐய வினா:- தனக்கு ஐயமாக இருக்கின்ற ஒரு பொருள் குறித்து ஐயத்தினைப் போக்கிக் கொள்வதற்காக வினாவப்படும் வினா ஐயவினா எனப்படும்**
  **எ.கா:- அங்கே கிடப்பது பாம்பா? கயிறா?**
- **கொளல் வினா:- ஒரு பொருளை கடைக்காரரிடம் வாங்கும் பொருட்டு வினவப்படும் வினா கொளல் வினா எனப்படும்.**
  **எ.கா:- பருப்பு உள்ளதா? என கடைக்காரரிடம் கேட்பது**
- **கொடை வினா:- தான் ஒரு பொருளைக் கொடுப்பதற்காக, அப்பொருள் இருத்தலைப் பற்றிப் பிறரிடம் வினவுவது கொடைவினா எனப்படும்**

**எ.கா:- மாணவர்களே! உங்களுக்குச் சீருடை இல்லையா?**

**ஏவல் வினா:-**

- **ஒரு தொழிலைச் செய்யும்படி ஏவும் வினா ஏவல் வினா எனப்படும்**
  **எ.கா:- மனப்பாடச் செய்யுளைப் படித்தாயா?**

41.அகர வரிசையில் அமைக்கப்பட்டுள்ளதை எழுதுக

அ)பாட்டு பட்டு பையன் பௌவம் ஆ)பட்டு பாட்டு பௌவம் பையன்

இ)பையன் பௌவம் பட்டு பாட்டு ஈ)பட்டு பாட்டு பையன் பௌவம்

***விடை :*** ஈ)பட்டு பாட்டு பையன் பௌவம்

www.Kanchikalvi.com

42.பின்வருவனவற்றைப் பொருத்துக

அ)வினைப்பயன் விளையுங்காலை உயிர்கட்கு 1. பத்துவகைக் குற்றங்களின் பயன்

ஆ)மக்கள் தேவர் பிரமர் நரகர் விலங்கு பேய் என்று 2. பத்தின் நீங்கித்தானம் சீலம் தாங்குவது

இ)தீவினை என்பது 3.மனப்பேரின்பமும் கவலையும் வாட்டும்

ஈ)நல்வினை என்பது 4. அலகில் பல்லுயிர் அறுவகைத்தாகும்.

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ | 1 | 4 | 2 | 3 |
| ஆ | 3 | 4 | 1 | 2 |
| இ | 2 | 1 | 3 | 4 |
| ஈ | 3 | 2 | 1 | 4 |

***விடை :*** ஆ 3 4 1 2

- **மூவுலகிலும் உள்ள உயிர்கள் - ஆறுவகை (மக்கள், தேவர், பிரமர், நகரர், விலங்கு, பேய்)**
- **உடலில் தோன்றும் குற்றங்கள் - 3 (கொலை, களவு, காமம்)**
- **சொல்லில் தோன்றும் குற்றங்கள் - 4(பொய் பேசுதல், புறங்கூறுதல், கடுஞ்சொல், பயனற்ற சொல்)**
- **உள்ளத்தில் தோன்றும் குற்றங்கள் - 3 (பேரவா, கடும்சினம் கொள்ளுதல், தெளிவிலா அறிவு).**

43. “வருவையாகிய சின்னாள் வாழா ளாதல்” -இந் நற்றிணைப் பாடலில் சின்னாள் என்பது

அ)சில நாள் ஆ) சிறு நாள் இ) சிறிய நாள் ஈ) சின்ன ஆள்

***விடை :*** அ)சில நாள்

44. திணையுடன் உரிப்பொருளைப்பொருத்துக

அ)குறிஞ்சி - 1. இருத்தலும் இருத்தல் நிமித்தமும்

ஆ)முல்லை - 2. இரங்கலும் இரங்கல் நிமித்தமும்

இ)மருதம் - 3. புணர்தலும் புணர்தல் நிமித்தமும்

ஈ)நெய்தல் - 4. ஊடலும் ஊடல் நிமித்தமும்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ | 1 | 3 | 2 | 4 |

| | | | | |
|---|---|---|---|---|
| ஆ | 3 | 1 | 4 | 2 |
| இ | 4 | 2 | 1 | 3 |
| ஈ | 2 | 4 | 1 | 3 |

***விடை :*** ஆ 3 1 4 2

45. ஐ என்னும் சொல்லின் பொருள்
அ) அரண் ஆ) சோலை இ) காவல் ஈ) தலைவன்
***விடை :*** ஈ) தலைவன்

46. அகரவரிசைப்படி சொற்களைச்சீர் செய்க
அ)சீப்பு சங்கு சைதை சொல் ஆ) சங்கு சீப்பு சைதை சொல்
இ) சைதை சொல் சீப்பு சங்கு ஈ) சொல் சைதை சங்கு சீப்பு
***விடை :*** ஆ) சங்கு சீப்பு சைதை சொல்

47. காய்கனி இதில் அமைந்துள்ள தொகைநிலைத்தொடரைக்கண்டறிக
அ)வினைத்தொகை ஆ) உம்மைத்தொகை இ) உவமைத்தொகை ஈ) பண்புத்தொகை
***விடை :*** ஆ) உம்மைத்தொகை

- **சொற்கள் இரண்டு முதலாகத் தொடர்ந்து வந்து பொருள் தருவது தொடர் எனப்படும்**
- **சொற்கள் தொடராகும் போது இரு சொற்களுக்கு இடையில் வேற்றுமை, வினை, உவமை முதலியவற்றுள் ஏதேனும் ஒன்று மறைந்து வரும் தொடரை தொகைநிலைத்தொடர்கள் என்பர்**
- **இது ஆறு வகைப்படும் அவை**
  1. **வேற்றுமைத் தொகை**
  2. **வினைத்தொகை**
  3. **பண்புத்தொகை**
  4. **உவமைத்தொகை**
  5. **உம்மைத்தொகை**
  6. **அன்மொழித்தொகை**

www.Kanchikalvi.com

48. நாற்கரணம் - சரியாகப் பிரிக்கப்பட்டிருப்பது எது?
அ) நான்கு + அரணம் ஆ) நான் +கரணம் இ)நாண் +கரணம் ஈ) நான்கு+ கரணம்
***விடை :*** ஈ) நான்கு+ கரணம்

49. அ*ள*வில் சனம் உ*ள*மனைய கு*ள*ம் நிறைந்த வ*ள*மருவும் தொடரில் அடிக்கோடிட்ட எழுத்துகள் குறிக்கும் தொடை
அ)மோனை ஆ) முரண் இ)இயைபு ஈ) எதுகை
***விடை :*** ஈ) எதுகை

- **அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது அடி எதுகைத் தொடை எனப்படும்.**

50. திருக்குறளை இயற்றியவர் யார்? என ஆசிரியர் மாணவனிடம் கேட்பது
அ)அறி வினா ஆ) ஐய வினா இ) அறியா வினா ஈ) கொளல்வினா
***விடை :*** அ)அறி வினா

51. திருசெந்திற் கலம்பகம் என்னும் நூலை இயற்றியவர்
அ)ஞான தேசிகர் ஆ) ஈசான தேசிகர் இ)தெய்வசிகாமணி ஈ) முத்துகுமாரசாமி
***விடை :*** ஆ) ஈசான தேசிகர்

- **திருச்செந்திற்கலம்பகம் என்னும் நூலை இயற்றியவர் ஈசான தேசிகர் என்னும் சுவாமிநாத தேசிகர்**
- **ஈசான தேசிகர் - சிறப்புப்பெயர் .**
- **தந்தை →தாண்டவமூர்த்தி**
- **மயிலேறும் பெருமாள் என்பாரிடம் கல்வி கற்றவர்.**

PUTHIYAVIDIYAL, THENI.

- இவர் திருவாவடுதுறை ஞான தேசிகராகிய அம்பலவாண தேசியகமூர்த்திக்குத் தொண்டராய் இருந்தவர்.
- ஏறத்தாழ 150 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர்.
- நூல் குறிப்பு:-
- திருச்செந்திற்கலம்பகம் → இந்நூல் 96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று.
- கலம்பகம் → கலம் + பகம் .
- கலம் → 12, பகம் → 6 ஆகப் 18 உறுப்புகளைக் கொண்டது.
- மேலும் பல்வகையான பா வகைகளும் கலந்திருத்தலால் இந்நூல் கலம்பகம் எனவும் பெயர் பெற்றது.
- 18 உறுப்புகளில் ஒன்றாகிய அம்மானை என்னும் பகுதியில் பாடல் உள்ளது.
- திருச்செந்தூர் முருகப்பெருமானைப் பற்றிப் பாடப்பட்டுள்ளது.

52.பொருத்துக

அ)சொல்லின் செல்வர் - 1. திரு.வி.க
ஆ)வசனநடை வல்லாளர் - 2. சாத்தனார்
இ)தமிழ்த்தென்றல் - 3. ஆறுமுக நாவலர்
ஈ)தண்டமிழ் ஆசான் - 4. ரா.பி.சேதுப்பிள்ளை

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ | 3 | 2 | 4 | 1 |
| ஆ | 2 | 4 | 1 | 3 |
| இ | 4 | 3 | 1 | 2 |
| ஈ | 1 | 2 | 4 | 3 |

***விடை :*** இ 4 3 1 2

53. பொருத்துக

அ)தொன்னூல் விளக்கம் - 1. குமரகுருபரர்
ஆ)நாலடியார் - 2. பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்
இ)திருவேங்கடத்து அந்தாதி - 3. வீரமா முனிவர்
ஈ) மதுரைக்கலம்பகம் - 4. சமணமுனிவர்கள்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ | 4 | 2 | 3 | 1 |
| ஆ | 3 | 4 | 2 | 1 |
| இ | 2 | 1 | 3 | 4 |
| ஈ | 4 | 3 | 1 | 2 |

***விடை :*** ஆ 3 4 2 1

54.பொருத்துக

அ)புத்தகச்சாலை -1. வாணிதாசன்
ஆ)தீக்குச்சிகள் -2. சுரதா
இ)சிக்கனம் -3. பாரதிதாசன்
ஈ)காடு -4. அப்துல் ரகுமான்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ | 2 | 1 | 3 | 4 |
| ஆ | 3 | 2 | 4 | 1 |
| இ | 3 | 4 | 2 | 1 |
| ஈ | 2 | 3 | 1 | 4 |

***விடை :*** இ 3 4 2 1

55. கரிகாலனின் முன்னோர் காற்றின் போக்கை அறிந்து கலம் செலுத்தினர் என்பதனைக் கூறும் நூல்
அ) பதிற்றுப்பத்து ஆ) புறநானூறு இ)பரிபாடல் ஈ)நெடுநல்வாடை

***விடை :*** ஆ) புறநானூறு

56. சீடைக் காகச் சிலேட்டு பணயம்
முறுக்குக் காக மோதிரம் பணயம்



www.Kanchikalvi.com
PUTHIYA VIDIYAL, THENI.

காப்பிக் காகக் கடுக்கன் பணயம்
இப்பாடலின் ஆசிரியர் யார்?
அ) கவிமணி தேசிக விநாயகம் ஆ)கவிப்பேரரசு வைரமுத்து
இ)கவிஞர் மு.மேத்தா ஈ)குழந்தைக்கவிஞர் அழ.வள்ளியப்பா
***விடை :*** ஈ)குழந்தைக்கவிஞர் அழ.வள்ளியப்பா

57.திரு.வி.க எழுதாத நூல்
அ)முருகன் அல்லது அழகு ஆ)நாயன்மார் வரலாறு இ)தமிழ்நாடும் நம்மாழ்வாரும்
ஈ)சத்தியவேத கீர்த்தனைகள்
***விடை :*** ஈ)சத்தியவேத கீர்த்தனைகள்

58. குறிஞ்சித்திட்டு எனும் நூலை இயற்றியவர்
அ)பாரதியார் ஆ)பாரதிதாசன் இ) சுரதா ஈ) கவிமணி
***விடை :*** ஆ)பாரதிதாசன்

59. வீரசோழியம் என்னும் இலக்கண நூலை இயற்றியவர்
அ)காரியாசான் ஆ) புத்தமித்திரர் இ)பவணந்தி முனிவர் ஈ)வீரமா முனிவர்
***விடை :*** ஆ) புத்தமித்திரர்

60. நெஞ்சாற்றுப்படை என அழைக்கப்படும் நூல்
அ)குறிஞ்சிப்பாட்டு ஆ)முல்லைப்பாட்டு இ)பட்டினப்பாலை ஈ)மதுரைகாஞ்சி
***விடை :*** ஆ)முல்லைப்பாட்டு

61. தமிழகத்தை எழுபத்திரண்டு பாளையங்களாகப் பிரித்து ஆண்டவர்கள்
அ) பாண்டியர்கள் ஆ) நாயக்கர்கள் இ) சேரர்கள் ஈ) சோழர்கள்
***விடை :*** ஆ) நாயக்கர்கள்

62. நோக்கினார் கண்ணிடத்தோ தம் தொழில் நிறுத்துவோர்
- என ஓவியருக்கு இலக்கண உரை வகுத்தவர்
அ) தொல்காப்பியர் ஆ)அடியார்க்கு நல்லார் இ)நச்சினார்க்கினியர் ஈ)அகத்தியர்
***விடை :*** இ)நச்சினார்க்கினியர்

www.Kanchikalvi.com
PUTHIYA VIDIYAL, THENI.

63.சரியான விடையைத்தேர்ந்தெடு
கீழ் உள்ளவற்றுள் தமிழ் நாட்டில் பறவைகள் புகலிடங்களுள் ஒன்று
அ)திருநின்றவூர் ஆ)கரூர் இ)வடுவூர் ஈ)பேரூர்
***விடை :*** இ)வடுவூர்

## <u>தமிழ்நாட்டுப் பறவைகள் புகலிடங்கள்:-</u>

1. **வேடந்தாங்கல்**
2. **கஞ்சிரங்குளம்**
3. **சித்திரங்குடி**
4. **கரிக்குடி (காஞ்சிபுரம் )**
5. **மேல்செல்வனூர்(இராமநாதபுரம் )**
6. **பழவேற்காடு (திருவள்ளூர் )**
7. **உதயமார்த்தாண்டம்(திருவாரூர்)**
8. **வடுவூர் (தஞ்சாவூர் )**
9. **கரைவெட்டி (பெரம்பலூர் )**
10. **வேட்டங்குடி (சிவகங்கை )**
11. **வெள்ளோடு (ஈரோடு )**
12. **கூந்தன்குளம்(திருநெல்வேலி )**
13. **கோடியக்கரை(நாகப்பட்டினம் )**

64.பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரனாரின் பட்டப்பெயர்
அ)புரட்சிக்கவிஞர் ஆ)உவமைக்கவிஞர் இ)மக்கள் கவிஞர் ஈ)இயற்கைக்கவிஞர்
***விடை :*** இ)மக்கள் கவிஞர்

- **மக்கள் கவிஞர்**

- **எளிய தமிழில் அனைவருக்கும் புரியும்படி கவிதைகளை இயற்றியவர் பொதுவுடைமைச் சிந்தனைகளை பரவலாக்கியவர்.**
- **பிறப்பு : பட்டுக்கோட்டை - செங்கப்படுத்தான்காடு**
- **காலம் 13.04.1930 – 08.10.1959**

65.தேம்பாவணியில் வளன் என்னும் பெயர்ச்சொல்லால் குறிக்கப்படுபவர்
அ)இயேசு கிறிஸ்து ஆ) சூசை மாமுனிவர் இ)தாவீது ஈ)கோலியாத்து
***விடை :*** ஆ) சூசை மாமுனிவர்

66.நான் தனியாக வாழவில்லை தமிழோடு வாழ்கிறேன் எனக்கூறியவர்
அ)நாமக்கல் வெ.இராமலிங்கம் பிள்ளை ஆ)இராமலிங்க அடிகளார்
இ)திரு. வி க ஈ)அண்ணா
***விடை :*** இ)திரு. வி க

- **தேசபக்தன், நவசக்தி இதழ்கள் மூலம் தொழிலாளர் முன்னேற்றம் பெறப் பாடுபட்டவர். முதன்முதலில் தொழிலாளர் சங்கம் அமைத்தவர். “நான் தனியாக வாழவில்லை; தமிழோடு வாழ்கிறேன்” எனக் கூறியவர். 17.09.1953 ஆம் ஆண்டு தனது 71வது வயதில் இயற்கை எய்தினார்.**

67. பேராயக் (காங்கிரஸ்) கட்சியிலிருந்து விலகிய பின் தந்தை பெரியார் தம்மை இணைத்துக் கொண்ட இயக்கம்
அ)நீதிக்கட்சி ஆ)சுயராச்சியக்கட்சி இ)திராவிடர் கழகம் ஈ) பொதுவுடைமைக்கட்சி
***விடை :*** அ)நீதிக்கட்சி

68. கோடக நல்லூர் சுந்தர சுவாமிகள் யாருடைய ஞானாசிரியர்?
அ)பெ. சுந்தரம் பிள்ளை ஆ)தெ.பொ. மீனாட்சி சுந்தரம் பிள்ளை
இ) கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை ஈ)ரா.பி.சேதுப்பிள்ளை
***விடை :*** அ)பெ. சுந்தரம் பிள்ளை

69.புத்தபிரானின் பாதத்தில் எத்தனை சக்கர ரேகை உண்டு எனச் சாத்தனார் புகழ்கிறார்?
அ) 100 ஆ)1000 இ)500 ஈ)900
***விடை :*** ஆ)1000

70. களையாத துன்பம் இக்காரிகைக்குக் காட்டி
வளையாத செங்கோல் வளைந்தது இதுவென் கொல் - இங்ஙனம் கூறியவர்
அ)மதுரை மக்கள் ஆ)கவுந்தி அடிகள் இ)சீத்தலைச்சாத்தனார் ஈ)கண்ணகி
***விடை :*** ஈ)கண்ணகி

71. நெடுந்தேர் ஊர்மி வலவ
- இந்த அகநானூற்று அடியில் உள்ள வலவ என்பதன் பொருள்
அ)தேர்ப்பாகன் ஆ) யானைப்பாகன் இ)வாயிற்காப்போன் ஈ)போர்வீரன்
***விடை :*** அ)தேர்ப்பாகன்

72. தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு - இக்குறட்பாவி படி கீழ்க்கணடவற்றுள் எது சரி ?
அ)தீப்புண் நாப்புண் ஆறாதவை ஆ) நாப்புண் ஆறும் தீப்புண் ஆறாது
இ)தீப்புண் ஆறும் நாப்புண் ஆறாது ஈ) தீப்புண்ணும் நாப்புண்ணும் ஆறிவிடும.
***விடை :*** இ)தீப்புண் ஆறும் நாப்புண் ஆறாது

73. நேயர் விருப்பம் விலங்குகள் இல்லாத கவிதை ஆகிய நூல்களை இயற்றியவர்
அ)தாராபாரதி ஆ) அப்துல் ரகுமான் இ) ஆலந்தூர் கோ.மோகனரங்கன் ஈ) மீரா
***விடை :*** ஆ) அப்துல் ரகுமான்

74. பீலிபெய் சாகாடும் என்பதில் சாகாடு என்ற சொல்லின் பொருள்

www.Kanchikalvi.com PUTHIYA VIDIYAL, THENI.

அ)சுடுகாடு ஆ) வண்டி இ)மண்டி ஈ)இடுகாடு

***விடை :*** ஆ) வண்டி

75. தமிழ் நாடகக்கலைக்கு ஒரு பெர்னாட்ஷா எனப்பாராட்டப்பெற்றவர்

அ)சங்கரதாசு சுவாமிகள் ஆ)பம்மல் சம்மந்த முதலியார் இ)அறிஞர் அண்ணா ஈ)தி.க சண்முகம்

***விடை :*** ஆ)பம்மல் சம்மந்த முதலியார்

76. பிரெஞ்சுக் குடியரசுத்தலைவரால் செவாலியர் விருது பெற்ற கவிஞர்

அ)கண்ணதாசன் ஆ) வாணிதாசன் இ) முடியரசன் ஈ)மு.மேத்தா

***விடை :*** ஆ) வாணிதாசன்

77. எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்

இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே

அ)பாரதியார் ஆ) பாரதிதாசன் இ)வாணிதாசன் ஈ)கம்பதாசன்

***விடை :*** ஆ) பாரதிதாசன்

**பாரதி(மரபுக்கவிதை):**

**"முப்பது கோடி முகமுடையாள் உயிர் மொய்ம்புற ஒன்றுடையாள்"-ஒருமைப்பாடு**

**"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் - தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்"-தமிழ்வளர்ச்சி**

**பாரதிதாசன்:**

**"எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே"-தமிழர் எழுச்சி பெற.**

**"எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான இடம் நோக்கி நடக்கின்றது இந்தவையம்"-பொதுவுடைமை**

78.பொருந்தாத இணையைக் குறிப்பிடுக

| | | |
|---|---|---|
| அ)சிற்றிலக்கியங்கள் | - | தொண்ணூற்றாறு |
| ஆ)திருக்குறள் | - | முப்பால் |
| இ)மலைபடுகடாம் | - | கூத்தராற்றுப்படை |
| ஈ)பரிபாடல் | - | பத்துப்பாட்டு |

***விடை :*** ஈ)பரிபாடல் பத்துப்பாட்டு

- பரிபாடல் எட்டுத்தொகையைச்சார்ந்தது

www.Kanchikalvi.com

79. வள்ளை என்பது

அ)ஏற்ற நீர் பாட்டு ஆ) நடவுப்பாட்டு இ)உலக்கைப்பாட்டு ஈ)தாலாட்டு

***விடை :*** இ)உலக்கைப்பாட்டு

- **நெல் குத்தும்போது பெண்களால் பாடப்படும் உலக்கைப்பாட்டு.**

80.பட்டியல்

| | |
|---|---|
| அ)அறுவை வீதி | 1. மள்ளர் வாழும் வீதி |
| ஆ)கூல வீதி | 2. பொற் கடை வீதி |
| இ)பொன் வீதி | 3. தானியக்கடை வீதி |
| ஈ)மள்ளர் வீதி | 4. ஆடைகள் விற்கும் கடை வீதி |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ | 4 | 3 | 2 | 1 |
| ஆ | 3 | 1 | 4 | 2 |
| இ | 2 | 1 | 3 | 4 |
| ஈ | 1 | 2 | 3 | 4 |

***விடை :*** அ 4 3 2 1

- **அறுவை வீதி – ஆடைகள் விற்கும் கடைப்பகுதி**
- **கூல வீதி – தானியக்கடை, பொன்வீதி – பொற்கடைகள்**
- **மன்னவர் வீதி – மன்னர்வாழும், மறையவர்வீதி – அந்தணர் வீதி**

PUTHIYA VIDIYAL, THENI.